# 7. உவமையியல்

தமிழிலக்கியத்தில் உவமை என்பது தனிச்சிறப்புடையது. இதனை இலக்கிய நூல்களில் மட்டும் அல்லாது பேச்சு வழக்கிலும் மக்கள் உவமை நலம் காட்டிப் பேசுதலைக் காணலாம். படித்தற்கு இனிமையாகவும் சொல்லக் கேட்கச் சுவையாகவும் விளங்குவது உவமை. இலக்கியங்களில் உவமைகள் வாயிலாக அருமையுடைய பல அறங்கள் உரைக்கப்படுகின்றன.

38 நூற்பாக்களையுடைய இவ்வியல் 1. உவமைஇயல்பு 2. உவமச் சொற்கள் 3. உள்ளுறை உவமம், 4. தனிச்சிறப்புத் தன்மை என்னும் வகையில் நான்கு துணைத்தலைப்புகளில் ஈண்டு தரப்பட்டுள்ளது.

இனி இந்நூற்பாக்களையும் அவற்றின் விளக்கத்தையும் இனிது சாண்போம்.

## 1. உவமையின் இயல்பு

**நூற்பா-272:**

வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்.

**தெளிவுரை:** உவமை என்பது தொழில், பயன் வடிவம், நிறம் என்று சொல்லப்பட்ட நான்கின் வகையில் தோற்றம் பெறும்.



**விளக்கவுரை:** இதனால் கண் புலனுக்குத் தோன்றாதனவும் உள்ளமை பெறப்படும். அவை செவியினாலும் நாவினாலும், மூக்கினாலும், மெய்யினாலும், மனத்தினாலும் அறியப்படுவன என்பது இளம்பூரணர் காட்டும் உரைநலம் ஆம்.

**எடுத்துக்காட்டு:**

1. புலிபோலப் பாய்ந்தான் - தொழில் குறித்தது.
2. மாரி அன்ன வண்கை - பயன் குறித்தது.
3. துடி போலும் இடை - வடிவம் குறித்தது.
4. தளிர்போலும் மேனி - நிறம் குறித்தது.
5. குயில் போலும் மொழி - செவியால் அறியப்பட்டது
6. வேம்பு போல் கைக்கும் - நாவால் அறியப்பட்டது.
7. தீப்போலச் சுடும் - மெய்யினால் அறியப்பட்டது.
8. ஆம்பல் நாறும் துவர்வாய் - மூக்கால் அறியப்பட்டது.
9. "தம்மில் இருந்து தமது பாத்து உண்டற்றால் அம்மா அரிவை முயக்கு." - திருக்குறள்: 1107 மனத்தால் அறியப்பட்டது.

**அரும்பதவுரை:** வினை-தொழில். மெய்-வடிவம். உரு-நிறம். தோற்றம்-புலனாகும் தன்மை. 1

**நூற்பா-273:**

விரவியும் வரூஉம் மரபின என்ப.

**தெளிவுரை:** மேற் கூறப்பட்ட உவமைகள் ஒருபொருள் மட்டும் அல்லாது இரண்டும் பலவும் என விரவி வரும் மரபினை யுடையவாம்.

**விளக்கவுரை:** உவமை ஒன்றின் மேற்பட்டுக் கலந்து வருதலும் உண்டு எனக் கூறப்பட்டது.

**எடுத்துக்காட்டு:** ''இலங்கு பிறை அன்ன விளங்கு வால்வை எயிறு'' இதில் பிறைச் சந்திரனின் வெண்மை நிறம் பல்லுக்கும், பிறையின் நுனியில் உள்ள கூர்மை பல்லின் கூர்மைக்கும் உவமைகளாக வந்தமையாம். 2

**நூற்பா-274:**

உயர்ந்ததன் மேற்றே உள்ளும் காலை.

**தெளிவுரை:** உவமையாவது ஆராய்ந்து நோக்குமிடத்து உயர்ந்த பொருளின் மேலவாய் வரும்.

**விளக்கவுரை:** உவமை கூறப்படும் பொருள் உயர்வுடைய தாக இருத்தல் இயல்பாகும் என்பதாம்.

**எடுத்துக்காட்டு:**

*''தாமரை புரையும் காமர் சேவடிப்*
*பவளத்து அன்ன மேனித் திகழ்ஒளி''* -குறுந்தொகை, கடவுள் வாழ்த்து

இதில் சிறப்புடைய தாமரைமலர் அழகிய பாதத்திற்கு உவமை கூறப்பட்டது.

அது போலவே சிவந்த மேனிக்குப் பவளம் என்னும் உயர்வுடைய பொருள் உவமை கூறப்பட்டது.

**அரும்பதவுரை:** உயர்ந்தது-மேன்மையான பொருள். உள்ளுதல்-ஆராயந்து பார்த்தல். 3

**நூற்பா-275:**

சிறப்பே நலனே காதல் வலியோடு
அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப.



**தெளிவுரை:** உவமை என்பது சிறப்பு, நலன், காதல், வலிமை ஆகிய நான்கு தன்மைகளுடன் விளங்குவனவாக வும் மேன்மையைப் புலப்படுத்துமாறும் நிலைக்களனாகக் கொண்டு அமைவதாகும்.

**எடுத்துக்காட்டு:**

1. *''முரசு முழங்கு தானை மூவரும் கூடி*
*அரசவை இருந்த தோற்றம் போலப்*
*பாடல் பற்றிய பயனுடை எழாஅல்''* -பொருநர்., 54-56

இதில் பெருமை மிகும் தமிழ் மன்னர்களாகிய சேர, சோழ, பாண்டியர் மூவரும் தம்மிற் பகைமை நீங்கி அரசவையில் இருந்த தோற்றமானது பேசப்படுதலால் இது சிறப்பினை நிலைக்களனாகக் கொண்டது.

2. *''ஓவத் தன்ன இடனுடை வரைப்பின்''* -புறநானூறு, 251

இதில் ஓவியம் போலும் வனப்பு அமைந்த இடத்தை யுடைய நகரம் என்பதால் நலம் கூறினமை நிலைக் களனாகக் கொண்டது.

3. *''கண் போல்வான் ஒருவன் உளன்''*

இதில் கண் போலும் சிறந்தவன் என்று பேரன்பு காரணமாக உவமித்தலால் காதல் என்பது நிலைக்களனாக அமைதல் காண்க.

4. *''அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்''* -பட்டினப். 218

இதில் சிங்கம் போன்று வலிமையுடைமை கூறுதலால் வலிமை நிலைக்களனாதலாம்.

**அரும்பதவுரை:** சிறப்பு-பெருமையைக் குறித்தது. நலன்-நன்மை தருவன. காதல்-அன்புடைமை. வலி-வலிமை. ஆற்றல். 4

**நூற்பா-276:**

கிழக்கிடும் பொருளோடு ஐந்தும் ஆகும்.

**தெளிவுரை:** தாழ்ந்த பொருளோடு உவமித்தலும் உரியதால் உவமையின் தன்மை ஐந்து எனக் கூறப்படும்.

**விளக்கவுரை:** மேற்குறித்த நூற்பாக்களின்படி உவமைகள் மேன்மை குறித்து வருவன என்று சாற்றி அவை சிறப்பு, நலன், காதல், வலிமை ஆகிய நான்கொடு தாழ்ந்த பொருளும் சேர்ந்து ஐந்தென உவமைவரும் எனக்கூறப் பட்டது.

**எடுத்துக்காட்டு:**

*''ஒண்செங் கழுநீர்க் கண்போ லாயிதழ்*
*ஊசி போகிய சூழிசெய் மாலையான்''* -அகம். 48

இதில் மகளிர் கண்போல் அழகாக மலர்ந்துள்ள மலர்களைச் சூழவைத்து ஊசியால் கோத்துத் தைக்கப்பட்ட மாலையை மார்பில் அணிந்தவன் என்று சாற்றியமையாம். இதனால் கண்போல இதழ் எனப் பொருள் உவமையும் உவமம் பொருளாகவும் நிற்றல் காணத்தக்கது.

**அரும்பதவுரை:** கிழக்கிடும் பொருள்-தாழ்ந்த பொருள். கீழ்ப் படுக்கப்படும் பொருள் என்பது பேராசிரியர் உரைக் குறிப்பு.
5

**நூற்பா-277:**

முதலும் சினையும் என்றுஆயிரு பொருட்கு
நுதலிய மரபின் உரியவை உரிய.

**தெளிவுரை:** முதல் சினை என்று சொல்லப்பட்ட இரு வகைப் பொருளுக்கும் உரிய மரபினால் அவற்றுக்கு ஏற்ப உவமை அமையும்.



**எடுத்துக்காட்டு:**

1. *''தாமரை புரையும் காமர் சேவடி''* -குறுந்தொகை.

இதில்

(அ) தாமரை-சினைப்பொருள்.

(ஆ) சேவடி-சினைப்பொருள்.

2. *''நெருப்பின் அன்ன சிறுகட் பன்றி''* -அகம் 84

இதில்

(அ) நெருப்பு-முதற் பொருள்

(ஆ) கண்-சினைப்பொருள்

**அரும்பதவுரை:** முதல் -முதலாம் தன்மை. சினை-உறுப்பு.
6

**நூற்பா-278:**

சுட்டிக் கூறா உவமம் ஆயின்
பொருள்எதிர் புணர்த்தப் புணர்த்தன கொளலே.

**தெளிவுரை:** சுட்டிக் கூறாத உவமமாக இருப்பின், உவமச் சொல்லோடு பொருந்தியவாறு உவமிக்கப்படும் பொரு ளோடு சேர்ந்து உவமைக்குரிய வாய்ப்பாடு கொள்ளுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு:**

*''மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*
*நோக்கக் குழையும் விருந்து.''* -திருக்குறள், 90

இதில் அதுபோல என்று சுட்டிக் கூறாமையும் உவமை யாயினமை காண்க.

**அரும்பதவுரை:** சுட்டிக் கூறா-அதுபோல என்று சுட்டிக் கூறாத தன்மை. பொருள் எதிர் புணர்ந்து-பொருளின் தன்மையைக் கண்டு உவமையாகக் கொள்ளப்படுதல். 7

**நூற்பா-279:**

உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும்.

**தெளிவுரை:** உவமையும் அது சுட்டும் பொருளும் ஒன்றினுக்கொன்று ஒத்து இருத்தல் வேண்டும்.

**விளக்கவுரை:** உவமை ஒன்றும் பலவுமாய் வரினும் வருமொழியும் அவ்வாறே வருதல் வேண்டும். இவ்வாறு அமையாது மிகுந்தும் குறைந்தும் வருதல் குற்றம் ஆம்.

**எடுத்துக்காட்டு:**

*''மயில் தோகை போலும் கூந்தல்''*

என்பது போலவும்

*''காக்கைச் சிறகு அன்ன கருங் கூந்தல்''*

என்பது போலவும் வருவது ஒத்து இருத்தல் என்பதாம். பூனைபோலப் பாய்ந்தான் என்பதும் ''புலிபோலப் பாய்ந்தான்'' என்பதும் ஒக்கும். 8

**நூற்பா-280:**

பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின்அஃது உவமம் ஆகும்.

**தெளிவுரை:** உவமிக்கும் பொருளை உவமம் ஆக்கிக் கூறினும் மயக்கம் இல்லாத சிறப்பு நிலையால் அதுவே உவமை ஆகும்.

**விளக்கவுரை:** மருளரு சிறப்பின் என்றதனால் மயக்கம் தீரச் சிறப்பித்தல் வேண்டும் என்பதாம். ''தாமரை ஒக்கும் முகம்'' என்பது தாமரை போலும் சிவந்த முகம் எனக் குறிக்கும். ''முகம் ஒக்கும் தாமரை'' என்பதில் முகத்திற்குச் சிறப்புடைமையாம் என்பது கருத்து.

**அரும்பதவுரை:** மருளறு சிறப்பின்-மயக்கம் சாராத சிறப்பு. உவமையாகும். தாமரை உவமிக்கப்படும் பொருளா யினமை காண். 9



**நூற்பா-281:**

பெருமையும் சிறுமையும் சிறப்பின் தீராக்
குறிப்பின் வரூஉம் நெறிப்பாடு உடைய.

**தெளிவுரை:** உவமை கூறும்போது பெருமையாகக் கூறுதலும் சிறுமையாகக் கூறுதலும் சிறப்புத் தன்மை நீங்காமல் வருதல் வேண்டும் என்னும் நெறியுடையது.

**விளக்கவுரை:** உவமை என்பது மேன்மை விளங்கத் தெரிவித்தலாகும். மற்றும் சிறப்பான உவமையானாலும் இழிவுடைய உவமையானாலும் ஒன்றன் நெறியின் நீங்காது இருத்தல் வேண்டும் என்பதாம்.

**எடுத்துக்காட்டு:**

1. ''இந்திரனே போலும் இளஞ்சாத்தன்''

-இதில் சிறப்புக் கூறப்பட்டது.

2. ''நாயனையார் கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்''

-இதில் சிறுமை என அமைதலாயினும் நாயின்கண் கிடந்ததோர் நற்குணம் பற்றிச் சாற்றிய நெறிப்பாடு காண்க.

10

## 2. உவமச் சொற்கள்

**நூற்பா-282:**

அவை தாம்
அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப,
என்ன, மான, என்றவை எனாஅ,
ஒன்ற, ஒடுங்க, ஒட்ட ஆங்க,
வென்ற, வியப்ப, என்றவை எனாஅ,
எள்ள, விழைய, இறப்ப, நிகர்ப்பக்
கள்ள, கடுப்ப, ஆங்கவை எனாஅக்,
காய்ப்ப, மதிப்ப, தகைய, மருள,
மாற்ற, மறுப்ப, ஆங்கவை எனாஅப்
புல்லப் பொருவப் பொற்பப் போல,
வெல்ல, வீழ, ஆங்கவை எனாஅ,
நாட, நளிய, நடுங்க, நந்த,
ஓடப் புரைய என்றவை எனாஅ,
ஆறாறு உவமையும்,அன்னவை பிறவும்
கூறுங் காலைப் பல்குறிப் பினவே.

**தெளிவுரை:** இங்கு முப்பத்தாறு உவமைகள் சாற்றப் படுவன. அவை வருமாறு. 1. அன்ன, 2. ஏய்ப்ப, 3. உறழ, 4. ஒப்ப, 5. என்ன, 6. மான, 7. ஒன்ற, 8, ஒடுங்க, 9. ஒட்ட, 10. ஆங்க, 11. வென்ற, 12. வியப்ப, 13. எள்ள, 14. விழைய, 15. இறப்ப, 16. நிகர்ப்ப, 17. கள்ள, 18. கடுப்ப, 19. காய்ப்ப, 20. மதிப்ப, 21. தகைய, 22. மருள, 23. மாற்ற, 24. மறுப்ப, 25. புல்ல, 26. பொருவ, 27. பொற்ப, 28. போல, 29. வெல்ல, 30. வீழ, 31. நாட, 32. நளிய, 33. நடுங்க, 34. நந்த, 35. ஓட, 36. புரைய.



அன்ன பிறவும் எனச் சாற்றியமையால் நோக்க என்ப தனை நூற்பா 283-இல் உரைத்தவழியும், நேர என்பதனை நூற்பா 287 இல் உரைத்தவழியும் காண்க.

**விளக்கவுரை:** அன்ன பிறவும் ஆகிய உவமைகள் அனை, அற்று, இன், ஏந்து, ஏர், சீர், கெழு, செத்து, ஏர்ப்ப, ஆர என்பவை இளம்பூரணர் சாற்றும் உரை நலம் ஆம்.

மற்றும் பேராசிரியர் நேர, நோக்க, துணைப்ப, மலைய, ஆர, அமர, அனைய, ஏர, ஏர்ப்ப, செத்து, அற்று, கெழுவ எனவும் கொள்ளப்படுமாறு சாற்றுதலாம்.

**எடுத்துக்காட்டு:**

1. வேல் ஒன்று கண் - ஒன்று.
2. கயல் வென்ற கண் - வென்ற
3. மணிநிறம் மாற்றிய மாமேனி - மாற்ற
4. மதியம் பொற்ப மலர்ந்த வாள்முகம் - பொற்ப
5. வேயொடு நாடிய தோள் - நாட
6. படங்கெழுநாகம் நடுங்கும் அல்குல் - நடுங்கு.

மேற்கண்ட ஆறு உவமைகள் அல்லாத பிறமுப்பதும் நூற்பா 283-இல் வினை உவமமாகவும், நூற்பா 285 இல் பயனிலை உவமமாகவும், நூற்பா 286-இல் மெய்ப்பால் உவமமாகவும், நூற்பா 287 இல் உருவின் உவமமாகவும் உரைத்தல் காண்க.

பிறவும் ஆகிய உவமைகள் வருமாறு:

1. ''குன்றின் அனையாரும் குன்றுவர் - அனை'' -திருக்குறள். 965
2. ''இறந்தாரை எண்ணிக் கொண்டற்று - அற்று'' -திருக்குறள் 22
3. ''மருப்பின் திரிந்து மறிந்து வீழ்தாடி - இன்'' பாலைக்கலி, 14

4. ''துணைமலர் எழில் நீலத்து ஏந்து எழில்
மலர் உண்கண் - ஏந்து'' -பாலைக்கலி, 13

5. ''முத்து ஏர் முறுவலாய் - ஏர்'' -மருதக்கலி, 28

6. ''எச்சிற்கு இமையாது பார்த்திருக்கும் அச்சீர் - சீர்''
-நாலடியார், 345

7. ''யாழ்கெழு மணிமிடற்று அந்தணன் - கெழு''
-அகநானூறு - கடவுள் வாழ்த்து

8. ''கிளை செத்து மொய்த்த தும்பி - செத்து'' -நற்றிணை, 35

9. ''காண்கமன் கொண்கனைக் கண் ஆரக் கண்டபின் - ஆர''
-திருக்குறள், 1265

**அரும்பதவுரை:** உழற-பொருந்த. மான-பெருமை. இறப்ப- கடந்த. புரைய-ஒப்ப. ஆறாறு-36. 11

**நூற்பா-283:**

அன்ன ஆங்கு மான இறப்ப
என்ன உறழத் தகைய நோக்கொடு
கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்.

**தெளிவுரை:** அன்ன, ஆங்கு, மான, இறப்ப, என்ன, உறழ, தகைய, நோக்கு என்று சொல்லப்படும் எட்டும் வினை உவமத்திற்கு உரிய சொல்லாம்.

**விளக்கவுரை:** நோக்கு என்பது இந்நூற்பாவில் சொல்லப் பட்ட உவமம் ஆம் ஏனைய ஏழும் நூற்பா எண் 282 இல் சொல்லப்பட்ட 36-உள் அடங்கும் என்பதாம். இதனில் வினைவகை உவமம் நூற்பா-272 இல் சுட்டியமையும் நோக்குக.

**எடுத்துக்காட்டு:**

1. ''கொன்றன்ன இன்னா செய்யினும் - அன்ன'' -திருக்குறள், 109



2. ''பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டு ஆங்கு - ஆங்கு''
-திருமுருகாற்றுப்படை

3. ''புலவு நுனைப் பகழியும் சிலையும் மானச்
செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும் - மான''
-பெரும்பாண். 269,271

4. ''புலி யிறப்ப வொலி தோற்றலின் - இறப்ப''

5. ''புலி யென்னக் கலிசிறந் துராஅய் - என்ன''

6. ''செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை - உறழ்''

7. ''பொருகளிற்று எருத்தின் புலிதகையப் பாய்ந்து - தகைய''

8. ''மான்ஒக்கு நோக்கு மடநடை ஆயத்தார் - நோக்கு''

**அரும்பதவுரை:** கண்ணிய-இடமாதல். நிலைக்களம். வினைப்பால் உவமம்- தொழில் தன்மை உவமை கூறியது. 12

**நூற்பா-284:**

அன்னஎன் கிளவி பிறவொடும் சிவணும்.

**தெளிவுரை:** அன்ன என்னும் சொல் வினைத் தன்மை மட்டும் அல்லாது பிறதன்மையொடும் பொருந்தி வரும்.

**விளக்கவுரை:** அன்ன என்னும் உவமம் ஏனைய பயன் மெய், உரு ஆகிய இடங்களிலும் நிலைபெறத் தோன்றும் என்பதாம்.

**எடுத்துக்காட்டு:**

1. ''மாரி அன்ன வண்மை-இது பயன் குறித்தது.''
-புறநானூறு, 133

2. பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூ
கருவிருந்தன்ன கண்கூடு சிறு துறை'' -பெரும்பாணாற்று, 7-8
இது மெய் குறித்தது.

3. செவ்வான் அன்ன மேனி
-இது உரு குறித்தது.
4. பால் அன்ன வெண்மொழி
-இது உரு குறித்தது.

**அரும்பதவுரை:** பிற-வினைத்தன்மை மட்டும் அல்லாது, பயன் மெய், உரு எனவும் ஆம். 13

**நூற்பா-285:**

என்ன விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
என்றாங்கு எட்டே பயனிலை உவமம்.

**தெளிவுரை:** என்ன, விழைய, புல்ல, பொருவ, கள்ள, மதிப்ப, வெல்ல, வீழ என்று சொல்லப்படும் எட்டும் பயனிலை சாற்றும் உவமம் ஆம்.

**விளக்கவுரை:** நூற்பா 282-இல் சுட்டிய உவமங்கள் 36-இன் எட்டு உவமங்கள் இங்குக் கூறப்படுதலாம். இவை பயன் தன்மையில் அமைவதாம்.

**எடுத்துக்காட்டு:**

1. "எழிலி வானம் எள்ளினன் தரூஉம்
கவிகை வள்ளைக் கடுமான் தோன்றல் -என்ன"
2. "மழை விழை தடக்கை வாய்வாள் எவ்வி -விழைய"
3. "புத்தேள் உலகில் பொன்னம் புல்ல - புல்ல"
4. "விண்பொரு புகழ் விறல் வஞ்சி - பொரு" -புறம்- 11 வரி 6
5. "கார்கள்ள வுற்ற பேரிசையுதவி -கள்ள"
6. இருநிதி மதிக்கும் பெருவளன் கை - மதிப்ப"
7. "வீங்கு கடல் நல்லான் வென்றவிகை - வென்ற."
8. விரிபுனற் பேர் யாறு வீழ யாவதும் - வீழ."

**அரும்பதவுரை:** பயனிலை உவமம்-பயன் சாற்றும் தன்மை. 14



**நூற்பா-286:**

கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய
ஒட்ட ஒடுங்க ஓட்ட நிகர்ப்பஎன்று
அப்பால் எட்டே மெய்ப்பால் உவமம்.

**தெளிவுரை:** கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய, ஒட்ட, ஒடுங்க, ஓட்ட, நிகர்ப்ப என்று சொல்லப்படும் எட்டும் மெய்ப்பால் உவமச் சொற்களாம்.

**விளக்கவுரை:** நூற்பா 282-இல் கூறப்பட்ட 36 சொற்களுள் எட்டு உவமங்கள் இங்குச் சொல்லப்படுவனவாம். இவை மெய்ப்பால் உவமச் சொற்களாம். மெய் என்பது வடிவத்தைச் சுட்டும்.

**எடுத்துக்காட்டு:**

1. "விண்ணதிர் இமிழிசை கடுப்ப - கடுப்ப" -மலைபடுகடாம் 2
2. "அகலிரு விசும்பின் குறைவில் ஏய்ப்ப - ஏய்ப்ப"
3. "வேய்மருள் பணைத்தோள் நெகிழ - மருள" -அகநானூறு 1
4. "வேய்புரை மென்தோள் பசலையும் - புரைய"
-குறிஞ்சிக்கலி 3, வரி 48
5. "முத்துடை வான்கோடு ஒட்டிய
முலையிலை விடப்பன தழீஇ - ஒட்ட"
6. "பாம்புரு ஒடுங்க வாங்கிய நுசுப்பின் - ஒடுங்க."
7. "செந்தீ போட்டிய அந்தடக்கைத் - ஓட்ட"
8. "கண்ணொடு நிகர்க்கும் கழிப்பூங் குவளை - நிகர்ப்ப" 15

**நூற்பா-287:**

போல மறுப்ப ஒப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்தஎன்று
ஒத்துவரு கிளவி உருவின் உவமம்.

**தெளிவுரை:** போல, மறுப்ப, ஒப்ப, காய்த்த, நேர, வியப்ப, நளிய, நந்த என்று சொல்லப்படும் எட்டும் உருவின் உவமச் சொற்களாம்.

**விளக்கவுரை:** நூற்பா 282-இல் சுட்டிய உவமங்கள் 36னுள் 7 உவமங்கள் இங்குச் சொல்லப்பட்டன. நேர என்பது இந்நூற்பாவில் கூறியமையாம்.

**எடுத்துக்காட்டு:**

1. *''செம்புலப் பெய்ந்நீர் போல - போல*
   *அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே''* -குறுந்தொகை, 40
2. *''தன்சொல் உணர்ந்தோர் மேனி - போல*
   *பொன் போல் செய்யும் ஊர்கிழ வோனே''* -ஐங்குறுநூறு. 41
3. *''மணிநிறம் மறுத்த மலர்பூங் காயா - மறுப்ப''*
4. *''ஒண் செங்காந்தள் ஒக்கும் நின்னிறம் - ஒப்ப''*
5. *''கணைக்கால் நெய்தல் காய்த்திய கண்ணியம் - காய்த்த''*
6. *''கார்விரி கொன்றைப் பொன் நேர் புதுமலர் - நேர''*
   -அகநானூறு
7. *''தண்தளிர் வியப்பத் தகைபெறு மேனி - வியப்ப''*
8. *''நளியிரு முந்நீர் - நளிய''*

நந்த என்பது வந்தவழிக் கொள்க.

**அரும்பதவுரை:** ஒத்துவருகிளவி-பொருந்த வரும் சொல். உரு-நிறம். குணம். 16

**நூற்பா-288:**

தத்தம் மரபில் தோன்றுமன் பொருளே.

**தெளிவுரை:** மேற்கூறியவாறு அல்லாது இச்சொற்கள் தத்தமது மரபில் தோன்றும் பொருளும் உளவாம்.



**விளக்கவுரை:** இவ்வுவமச் சொற்கள் மேற்குறித்தவாறு அமைதல் பெரும்பான்மையாம். அவ்வாறு இன்றித் தத்தமக்கு உரிய மரபு வழியும் அமையும் என்பதாம்.

**எடுத்துக்காட்டு:**

1. *''முழவுறழ் தடக்கையின் இயலஏந்தி'' -உறழ் (-திருமுருகு. 125)*
2. *''மாவென்ற மடநோக்கின்'' - வென்ற* -குறிஞ்சிக்கலி 21
3. *''வேய் வென்ற தோள்'' - வென்ற* - நெய்தற்கலி 21
4. *''மாரிவீழ் இருங் கூந்தல்'' - வீழ்* -பாலைக்கலி. 13
5. *''பொன்னுரை கடுக்கும் திலையர்'' -கடுப்ப* -திருமுருகாற். 145
6. *''குறுந்தொடி ஏய்க்கும் மெலிந்து வீங்கு -ஏய்ப்ப*
   பெருபாண்-13
7. *''செயலையந்தளிர் ஏய்க்கும் எழில் நலம் -ஏய்ப்ப*
   -பாலைக்கலி 14
8. *''பாஅன் மருள்மருப்பின் உரல்புரைபாவடி-புரைய*
   -பாலைக்கலி, 20
9. *''வலம்புரி புரையும் வால்நரை முடியினர்.'' -புரைய*
   (-திருமுருகு. 127)

பிறவும் அன்ன வந்த இடத்துக் கொள்க.

**அரும்பதவுரை:** மன்-சிறப்பினைக் குறித்தது. 17

**நூற்பா-289:**

நாலிரண் டாகும் பாலுமார் உண்டே.

**தெளிவுரை:** மேற் சொல்லப்பட்ட உவமை எட்டாம் தன்மையும் ஆகும்.

**குறிப்புரை:** இதே நூற்பாவாசகம் எண் 256இல் (மெய்ப் பாட்டியல்-2) வேறு விளக்கம் பெறுதலாய் வந்தமையும் நோக்கற்பாலது.

**விளக்கவுரை:** வினை பயன் மெய் உரு என்று நான்கு வகையாக மொழியப்படும் உவமம் மேலும் வினை, வினைக்குறிப்பு எனவும், பயன் என்பது நன்மை பயத்தல், தீமை பயத்தல் எனவும், மெய் என்பது வடிவம் அளவு எனவும், உரு என்பது நிறம், குணம் எனவும் ஆக எட்டு வகை வரும் என்பதாம்.

**எடுத்துக்காட்டு:**

*1. புலிபோலப் பாய்ந்தான் - வினை*

*2. பொன்னன் செல்வந்தன் - வினைக்குறிப்பு*

*3. மாரியன்ன வண்கை - நன்மைப் பயன்*

*4. ஞாயிறு அனையை நின் பகைவர்க்கு-தீமைப்பயன்*

*5. துடியிடை போலும் - வடிவு (மெய்)*

*6. நெடுவரை மிசையிற் பாம்பென*
*இழிதரும் கடுவரற் கலுழி - அளவு (மெய்)*

*7. தளிர்போலும் மேனி - நிறம் (உரு)*

*8. பாலன்ன மொழி - குணம் (உரு)*

**அரும்பதவுரை:** நாலிரண்டு-எட்டு. பால்-பக்கம். தன்மை. 18

**நூற்பா-290:**

பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்
வழிமருங்கு அறியத் தோன்றும் என்ப.

**தெளிவுரை:** பெருமை குறித்தும் சிறுமை குறித்தும் சாற்றப்படும் மெய்ப்பாடு எட்டு வகையில் அமையும் என்று அறியப்படும்.

**விளக்கவுரை:** உவமைகள், மெய்ப்பாட்டு நிலையில் எட்டும் வெளிப்படுத்தும் வகையானது ஈண்டுச் சொல்லப் பட்டது.

**எடுத்துக்காட்டு:**

*1. பெருஞ் செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல*
*வரும் செல்லும் பேரும் என் நெஞ்சு'' -முத்தொள்ளாயிரம்-88*

இது பெருக்கம் பற்றி வந்தது. இங்கு இளிவரல் என்னும் மெய்ப்பாட்டின் வகை கூறப்பட்டது.

*2. ''கலம் கவிழ்ந்த நாயகன் போல் கலை துணைப் பிரிதின்றி''*
*-யாப்ப வி.ப. 318*

இது துன்பப் பெருக்கம் பற்றிச் சாற்றி அவலச் சுவையை உணர்த்திற்று.

*3. அலாப்போல் அகன்றான் அல்குல் மேற்சான்றோர்*
*உசாஅப் போல உண்டே மருங்குல்''*

இது பெருமையும் சிறுமையும் சாற்றி உவகைச் சுவையை நல்கியது.

**அரும்பதவுரை:** எட்டன்-எட்டு என்று. அறியத் தோன்றும்-அறியுமாறு தோன்றும். 19

**நூற்பா-291:**

உவமப் பொருளின் உற்றது உணரும்
தெளிமருங்கு உளவே திறத்தியல் ஆன.

**தெளிவுரை:** உவமை எனப்பட்ட பொருளால் உவமேய மாகிய பொருளுக்கு ஒத்தன அறிந்து பலவாறு வரினும் இலக்கண மரபு கொண்டு பொருளை அறிதல் வேண்டும்.

**விளக்கவுரை:** உவமை வாயிலாகச் சாற்றப்படும்பொருள் துணியப்படாமை யாயின் இலக்கண மரபு கொண்டு அறிதல் வேண்டும் என்பதாம்.

**எடுத்துக்காட்டு:**

*1. ஐ தேய்ந் தன்று பிறையும் அன்று*

*2. மைதீர்ந் தன்று மதியும் அன்று*

*3. வேய மன்றன்று மலையும் அன்று*
*4. பூவமன்று அன்று சுனையும் அன்று*
*5. மெல்ல இயலும் மயிலும் அன்று*
*6. சொல்லத் தளரும் கிளியும் அன்று.*
*(ஐ-அழகு) -கலித்தொகை. குறிஞ்சிக்கலி. 191; வரிகள் 9-14*

இச்செய்யுளில்

*1. ஐ தேய்ந்தன்று பிறையும் அன்று:*
*அழகு தேய்ந்த பிறைச் சந்திரன் அன்று*

இதில் நெற்றி உவமை கூறப்பட்டது.

*2. மைதீர்ந்தன்று மதியும் அன்று*

இதில் சந்திரன் அன்று என்பது முகத்திற்கு உவமை கூறப்பட்டது.

*3. வேயமன்று அன்று மலையும் அன்று:*

மூங்கில் தோன்றும் இடமான மலைச்சாரல் கூறப்பட்டு மூங்கில் போலும் தோளை உணர்த்தியது.

*4. பூ அமன்றன்று அன்று சுனையும் அன்று:*

குவளை மலர் பூக்கும் இடம் ஆம் சுனை கூறப்பட்டுக் கண்ணுக்கு உவமை சாற்றியது.

*5. மெல்ல இயலும் மயிலும் அன்று*

இது மெல்ல நடக்கும் சாயலால் பெண்ணின் நடை கூறப்பட்டது.

*6. சொல்லத்தளரும் கிளியும் அன்று*

இது பேசும் தன்மையுடைய கிளி பெண்ணின் மொழிக்கு உவமை கூறப்பட்டது. இத்தன்மையில் உவமேய மாகிய பொருளுக்குச் சாற்றப்படும் உவமை உருவகத்தால் இலக்கண மரபின் வழியாகச் சாற்றி உணர்த்துதல் வருமாறு:



| | |
|---|---|
| 1. பிறை | - நுதல் (நெற்றி) |
| 2. மதி | - முகம் |
| 3. வேய் | - தோள் |
| 4. பூ (குவளை) | - கண் |
| 5. மயில் | - நடை |
| 6. கிளி | - மொழி |

மற்றும்

*கயல் எழுதி வில்லெழுதிக் கார் எழுதிக் காமன்*
*செயலெழுதித் தீர்த்தமுகம் திங்களோ காணிர்*
*(சிலம்பு. கானல்11)*

என்பதில்

| | |
|---|---|
| கயல் | - கண் |
| வில் | - புருவம் |
| கார் | - கூந்தல் |

என உவமித்தல் காண்க.

**அரும்பதவுரை:** தெளி மருங்கு-துணிதல் பக்கம். திறத்தியல்- இலக்கணமரபு கொண்டு அறிதல். 20

**நூற்பா-292:**

உவமப் பொருளை உணருங் காலை
மருவிய மரபின் வழக்கொடு வருமே.

**தெளிவுரை:** உவமை சாற்றப்படும் பொருளை உணரும் வகையில் நெடுங்காலமாக உலக வழக்கில் வருவன வற்றைக் கொண்டு அறியப்படுவனவாம்.

**விளக்கவுரை:** முன்னர்க் கூறப்பட்ட நூற்பாவின் தொடர்பாக இந்நூற்பா அமைந்ததாம். இதன் வாயிலாகக் கயல் என்பது கண்ணுக்கும் வில் என்பது புருவத்திற்கும், கார்மேகம் என்பது கூந்தலுக்கும் மரபுவழி சாற்றும் உவமைத் தன்மையில் உணரற்பாலது என்பதாம்.

**அரும்பதவுரை:** மருவிய மரபு-இலக்கிய மரபு. இது செய்யுள் மரபாம் என்க. வழக்கு-செய்யுள் வழக்கு. 21

**நூற்பா-293:**

இரட்டைக் கிளவியும் இரட்டை வழித்தே.

**தெளிவுரை:** உவமை இருசொல் கொண்டு வருவது இரட்டைக் கிளவி என்பதாம்.

**விளக்கவுரை:** உவமை இரண்டு சொல்லோடு வருதலும் உவமிக்கப்படும் பொருளும் இரண்டு பொருளாகி வருதலும் ஆம் என்பதாம்.

**எடுத்துக்காட்டு:**

*"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
*கற்றாரோடு ஏனை யவர்"* -திருக்குறள். 410

இதில், இலங்கு நூல்கற்றார்-மக்கள்

விலங்கு-ஏனையவராம், கல்லாதார்

இத்தன்மையில் இரண்டு சொல்லோடு உவமிக்கப்படும் பொருளும் இரண்டாகி வரும் தன்மை கூறப்படுதலாம்.

**குறிப்பு:** சொல்லதிகாரம் கிளவியாக்கத்தில் சாற்றப்படும் இரட்டைக் கிளவி வேறாம் என்க.

**அரும்பதவுரை:** இரட்டைக்கிளவி-இரண்டாக வரும் சொல். இரட்டைவழி-இரண்டு தன்மை. 22

## 3. உள்ளுறை உவமம்

**நூற்பா-294:**

பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்ன மரபின் கூறும் காலைத்
துணிவொடு வருஉம் துணிவினோர் கொளினே.



**தெளிவுரை:** உவமை கூறும்பொருள் அதனோடு பொருந்தித் தோன்றாது துணிவுடையோர் கூறும் பொருளின் கண்ணே வரும்.

**விளக்கவுரை:** உவமை சாற்றப்படுவது அப்பொருளுக்குத் தோன்றுவது போல அமைந்தாலும் வேறு ஒரு பொருளை உறுதியாகத் தோற்றுவிக்கும் தன்மை ஈண்டுக் கூறப்பட்டது.

**எடுத்துக்காட்டு:**

*"நிலவுக் காண்பது போல அணிமதி ஏர்தர"* -கலித்தொகை,
நெய்தற்கலி 2; வரி எண் 4

"தன் அழகில் புறம் காண்பது போல அழகுடைய சந்திரன் தோன்ற" என்பது இதன் பொருள்.

இங்குப் பிறிதாகிய பொருளோடு உவமை கூறாமையிற் பிறிதொடு படாதாயிற்று. சந்திரன் எழுச்சியை நோக்குதல் பிறப்பொடு நோக்குதலாயிற்று. அதுவே அவ்விடத்திற்கு முன்னம் ஆயிற்று. அம்மதியின் தோற்றம் இத்தன்மைத்து என்றாதலின் உவமச் சொல் வந்தமையாம்.

**அரும்பதவுரை:** பிறிது-உவமைப்பொருள் தான் அன்மை. துணிவு-உறுதித்தன்மை. 23

**நூற்பா-95:**

உவமப் போலி ஐந்தென மொழிப.

**தெளிவுரை:** உவமை போன்று வருவன ஐந்து என மேலோர் சொல்லுவர்.

**விளக்கவுரை:** இவை ஐந்து வகையால் வரும் என்பதாம். அவையாவன.

1. இதற்கு உவமையில்லை என்பது

*''நின்னோர் அன்னோர் பிறர் இவண் இன்மையின்*
*மின்னெயில் முகவைக்கு வந்தி சிற்பெரும!''* -புறநானூறு 373 வரிகள் 33,34

நின்னைப் போன்று பிறர் இல்லை என்பது இதன் பொருள். இதனால் இதற்கு உவமை இல்லை என்பதன் பால் அமையும்.

2. இதற்கு இதுதான் உவமை என்பது.

*''மன்னுயிர் முதல்வனை ஆதலின்*
*நின்னோர் அனைய நின் புகழொடும் பொலிந்தே''* -பரிபாடல்-1

நீ நினது புகழொடு பொலிந்து நின்னையே ஒத்தவனாகத் திகழ்கின்றனை என்பது இதன்பொருள்.

எனவே இதற்கு இதுதான் உவமை என்பதன் பாற்படும்.

3. பலபொருளின் உளதாகிய உறுப்புகளைச் சேர்த்தால் இதற்கு உவமையாகும் என்பது.

*''நல்லார்கள் நல்ல உறுப்பாயின தாங்கள் நாங்கள்*
*எல்லாம் உடனாதும் என்றன்ன இயைந்த வீட்டாற்*
*சொல்லாய் முகம் கண்முலை தோள் இடைஅல்குல் கைகால்*
*பல்வார் குழல் என்று இவற்றால் படிச்சந்தம் ஆனாள்.''*

-இதில் பலநல்ல உறுப்புகள் எல்லாம் சேர்ந்தாற் போல வந்துள்ளதால் பல பொருள்களின் உறுப்புக்களைச் சேர்த்து உவமையாகும் தன்மையாயிற்று.

4. பலபொருள்களிலுள்ள அழகு ஓரிடத்து வரின் இதற்கு உவமையாம் என்பது.

*''நாள் கோள் திங்கள் ஞாயிறு கனை அழல்*
*வந்தொருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை''* -பதிற்று. 14



இதில் நாள், கோள், திங்கள், ஞாயிறு, அழல் ஆகிய பல பொருளிலும் உளதாகிய அழகு ஒருங்கு சேர்ந்ததாக உரைக்கப்பட்டதால் இது பலபொருள்களிலுள்ள அழகு ஓரிடத்து வந்த உவமை என்பதன் பாற்பட்டது.

5. கூடாப் பொருளோடு உவமித்து வருவது.

*''வாராது அமைவானோ வாராது அமைவானோ*
*வாராது அமைகுவான் அல்லன் மலை நாடன்*
*ஈரத்துள் இன்னவை தோன்றின் நிழல் கயத்துள்*
*நீருள் குவளை வெந் தற்று.* -கலித்தொகை, குறிஞ்சிக்கலி 5 வரிகள் 28-31

இது நிழல்விளங்கும் நீரில் உள்ள குவளைமலர் வெந்தது அற்று என்பது உவமை. இது கண்ணின் வருத்தமும் உறுத்தலும் குறித்ததாயினும் கூடாப்பொருளோடு உவமை யாயினதால் கூடாப் பொருளோடு உவமித்தற் பாற்பட்டது.

**அரும்பதவுரை:** உவமப் போலி-உவமை போல வரும் தன்மை.

24

**நூற்பா-296:**

தவலருஞ் சிறப்பின் அத்தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
பிறப்பினும் வரூஉம் திறத்த என்ப.

**தெளிவுரை:** மேற்கூறப்பட்ட ஐந்தின் வகையான சிறப்பின் மிக்க உவமைகளும் வினைபயன், மெய், உரு, பிறப்பு ஆகியவற்றால் ஒப்பார் இல்லை எனவாறு அமைதல் ஆம்.

**விளக்கவுரை:** உவமையின் தன்மையானவை வினை உவமம், பயன் உவமம், மெய் உவமம், உரு உவமம், பிறப்பு உவமம் என்னும் வகையில் ஒப்பார் இன்றிச் சிறப்பொடு அமைதல் இங்கு உரைத்தலாம்.

**எடுத்துக்காட்டு:**

**1. வினைஉவமம்:**

*"கரும்பு நடுபாத்தியில் கலித்த தாமரை*
*கரும்பு கசி களையும் பெரும்புனல் ஊர!*
*புதல்வன் ஈன்றஎம் முயங்கல்*
*அதுவே தெய்ய நின் மார்புசிதைப் பதுவே."*

இதனுள் கரும்புப் பாத்தியுள் தானே விளைந்த தாமரை கரும்பின் பசி தீர்க்கும் ஊரன்" என்றாள். இக்கருத்து காதற் பரத்தையர்க்கும் இற்பரத்தையர்க்கும் உள்ள இடத்தில் யாம் உளவாகி இல்லறம் பூண்டு விருந்தோம்புகின்றனம். கரும்பு பசி களையும் தொழிலோடு விருந்தோம்பும் தொழில் உவமம் கொள்ள நின்றதால் வினை உவமம் போலி ஆயிற்று.

மற்றும் தலைவிக்கு அமைந்த இடத்தில் இல் பரத்தை புகுந்து நிலவுதலைக் கடிதலாம். இஃது உள்ளுறையும் ஆயிற்று.

**2. பயன் உவமம்:**

*"கரைசேர் வேழம் கரும்பிற் பூக்கும்*
*துறைகேழ் ஊரன் கொடுமை நாணி*
*நல்லன் என்னும் யாமே*
*அல்லன் என்னும் என்தடமென்தோளே."* -ஐங்குறு. 12

(வேழம்-பேய்க்கரும்பு)

இதனுள் "நீர் நிலைகளின் கரைகளில் நிற்கும் இழிந்த வேழம் (பேய்க்கரும்பு) உயர்ந்த கரும்பு போலவே பூக்கின்ற துறைகளை உடைய ஊரன்" என்பது முதலிரண்டு அடிகளின் பொருளாகும். தலைவி பரத்தை இருவரின் உயர்வு தாழ்வு அறியாது ஒப்ப நினைக்கும் தலைவன் போக்கு மறைமுகமாகக் குறித்தலாம்.



கரும்பு போல் பயன் தராத வேழம் தோற்றத்தில் அதைப் போலப் பூத்து நிற்பது சுட்டப்படுதலால், இது பயன் உவமப் போலியாய் உள்ளுறை ஆயிற்று.

**3. மெய் உவமம்:**

*"ஒன்றேன் அல்லென் ஒன்று வென் குன்றத்துப்*
*பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை*
*குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்*
*நின்றுகொய மலரும் நாடனொடு*
*ஒன்றேன் தோழி ஒன்றிசி னானே.* -குறுந்தொகை.208

இதனுள், யானையால் மிதிபட்டுச் காயும் வேங்கைப் பூக்களைக் குறவர் நாடன் நின்று மரத்திலிருந்து பறிக்கும் தன்மை கூறப்படுதலாம். அதனால் யானை போலும் தலைவனால் மிதியுண்ட வேங்கை மலர்தல் போல் ஊரார் அலர்தூற்ற உள்ள தலைவியின் தன்மை சாற்றுதலால் இது மெய்உவமம் ஆயிற்று.

**4. உருஉவமம்:**

*"வண்ண வொண்தழை நுடங்க வாலிழை*
*ஒண்ணுதல் அரிவை பண்ணை பாய்ந்தெனக்*
*கண்ணுறுங் குவளை நாறித்*
*தண்ணென் றிசினே பெருந்துறைப் புனலே"* -ஐங்குறுநூறு, 73

இதனுள் தலைவி புனலாடிய ஞான்று பரத்தை பாய்ந் தாடிய புனல் தண்ணென்றது எனக் கூறிய வழித் தலைவி ஆற்றாளாய் மேவினள். இஃது உருஉவமம் ஆயிற்று.

**5. பிறப்பு உவமம்:**

*"பொய்கைப் பள்ளி புலவு நாறு நீர்நாய்*
*வாளை நாளிரை பெறூஉம் ஊர*
*எந்நலந் தொலைவது ஆயினும்*
*துன்னலம் பெரும்பிறர்த் தோய்ந்த மார்பே"* -ஐங்குறு. 63

இதனுள் பொய்கையின் இடத்துப் பிறந்த நீர் நாய் தான்முதலில் தின்ற வாளை மீனின் புலால் நாற்றத்தினால் மறுபடியும் விரும்பி நாடும் தன்மை போல் தலைவன் நற்குலத்தில் பிறந்தும் இழிந்த குலத்தாராகிய பரத்தையரைத் தோய்ந்து பின்னும் அன்னாரையே நாடுவன் எனப்பட்டது. இதனால் இது பிறப்புப் பற்றிய உவமம் ஆயிற்று.

**அரும்பதவுரை:** தவலரும்-குறைவில்லாத. வினை-தொழில் பயத்தினும்-பயன். உறுப்பு-மெய். உரு-நிறம் உருவம். 25

**நூற்பா-297:**

கிழவி சொல்லின் அவள்அறி கிளவி.

**தெளிவுரை:** உவமைப் பொருள் தலைவி அறிந்த பொருட்கண் கூறப்படும். எனவே தான் அறியாத பொருட்கண் கூறாமையாம்.

**எடுத்துக்காட்டு:**

*தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்*
*சாந்தின் தொடுத்த தீந்தேன் போல!*

*-நற்றிணை, 1*

இதன்கண் தலைவி தான் அறிந்த உவமை சாற்றியமை காணப்பட்டது.

**அரும்பதவுரை:** கிழவி-தலைவி. கிளவி-சொல். 26

**நூற்பா-298:**

தோழிக்கு ஆயின் நிலம்பெயர்ந்து உரையாது.

**தெளிவுரை:** தோழி கூறும் உவமை அந்நிலத்தைப் பற்றியதேயல்லாது பிறவற்றைக் கூறமாட்டாள் என்பதாம்.

**அரும்பதவுரை:** நிலம்-தான் வாழும் நிலப் பகுதி இது குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் போன்றவற்றுள் ஒன்றாய்க் கொள்க. 27



**நூற்பா-299**

கிழவோற்கு ஆயின் உரனொடு கிளக்கும்

**தெளிவுரை:** தலைவன் கூறும் உவமை அறிவின்பாற்பட்டு நிலவும்.

**அரும்பதவுரை:** உரன்-அறிவாற்றல். திண்மையும் வீரமும் கொள்ளப்படும். 28

**நூற்பா-300:**

ஏனோர்க் கெல்லாம் இடம் வரைவு இன்றே.

**தெளிவுரை:** தலைவி, தலைவன் தோழி யொழிந்த ஏனையோர் உவமை கூறுவதற்கு வரையறை இல்லை.

**அரும்பதவுரை:** ஏனோர்-நற்றாய், செவிலி முதலியோர் என்க. இடம்-உவமைக்குரிய வகை. வரைவு இன்று-வரையறை இல்லை. 29

**நூற்பா-301:**

இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்
உவம மருங்கில் தோன்றும் என்ப.

**தெளிவுரை:** மகிழ்ச்சியின் வயமாகும் சொல்லும் புலவியின் வயமாகும் சொல்லும் உவமைச் சொற்கள் வாயிலாகத் தோன்றும்.

**விளக்கவுரை:** இது தலைவன் மற்றும் தலைவி, தோழி ஆகியவர்களுக்குரிய மரபு கூறியவாறு ஆயிற்று.

**எடுத்துக்காட்டு:**

*மாரி ஆம்பல் அன்ன கொக்கின்*
*பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு*
*கண்டல் வேரளைச் செலீஇயர் அண்டர்*
*கயிறரி எருத்திற் கதழுந் துறைவன்*

*-குறுந்தொகை, 117*

இது உருவக அணி என்று சொல்லப்படும். இத்தன்மையில் பேராசிரியர் இசையுவமை. கருத்துவமை. மோக உவமை, விலக்குவமை, வேற்றுப் பொருள் வைப்பு எனப் பல்வகை உவமைகள் வேறுபட வந்த உவமைத் தோற்றமாகக் குறித்தலும் அறியப்படுதலாம்.

**அரும்பதவுரை:** வேறுபட வந்த உவமை-உவமைக்கும் பொருட்கும் ஒப்புமை மாறுபடக் கூறுதலும், மறுத்துக் கூறுதலும், பிறிதோர் உவமை நாட்டுதலும் எனவாம். இவற்றை வினை, பயன், மெய், உரு என்னும் நான்கும் பற்றியவாறு அமையாது குறிப்பினால் கொள்ள வருதலால் உள்ளுறை உவமத்தின்பாலும் கொள்ளப்படும். கொளாஅல் -கொள்ளுதல்.

34

**நூற்பா-306:**

ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே.

**தெளிவுரை:** உவமையை உவமிக்கப்படும் பொருளின் நீக்கிக் கூறுதலும் மருவிய இயல்பு ஆகும்.

**விளக்கவுரை:** உவமையைச் சொல்லும் வகையில் உவமிக்கப்படும் பொருளை நீக்கிச் சொல்லப்படுதலும் அமையும்.

**எடுத்துக்காட்டு:**

*1. "அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்*
*அடிக்கு நெருஞ்சிப் பழம்."*
*-திருக்குறள்: 1120*

இதில் அனிச்சம் அன்னத்தின் தூவி என்பன உவமைகள். மாதர் அடி உவமேயம். மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம் என உவமையை உவமப் பொருளிலிருந்து நீக்கிக் கூறினமையால் ஒரீஇக் கூறுதல் ஆயிற்று.



*2. "மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்*
*காதலை வாழி மதி."*
*-திருக்குறள்: 1118*

இதில் காதலை வாழி மதி என்று கூறி "மதியமே அவள்முகம்" என்னுமாறு உவமித்தமையால் இங்கு மருவிக் கூறுதல் ஆயிற்று.

**அரும்பதவுரை:** ஒரீஇ-நீக்குதல். மரீஇ-மருவுதல்.

35

**நூற்பா-307:**

உவமைத் தன்மையும் உரித்தென மொழிப
பயனிலை புரிந்த வழக்கத்து ஆன.

**தெளிவுரை:** உவமிக்கப்படும் பொருளோடு உவமை வெளிப்பட வருதலே யன்றி உவமையின் தன்மை கூறுதலும் பயனிலை பொருந்திய வழக்குடைய உளதாம்.

**விளக்கவுரை:** உவமைச் சொல் உவமிக்கப்படும் பொருளோடு வருதல் உண்டு. மற்றும் அது பயனிலை கொள்ளுமாறும் வழக்கிடையே அமையும்.

**எடுத்துக்காட்டு:**

*பாரி பாரி என்று பல ஏத்தி*
*ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்*
*பாரி ஒருவனும் அல்லன்*
*மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே. -புறநானூறு. 107*

இதில் மாரிபோலப் புரிவது கொடை எனக் கூறாது, உலகத்தைப் பாதுகாக்கும் தன்மை மாரியிடமும் உண்டு என உவமையின் தன்மை கூறப்பட்டது. எனவே உவமையின் தன்மையாயினதோடு பயனிலையும் அமைந்தமையாம்.

**அரும்பதவுரை:** உவமைத்தன்மை-உவமை விளக்கம். பயனிலை-பயனின் சிறப்பு.

36

பின்னும்,

பெண்யானை (பிடி) போன்ற நடை எனவும்,
மான் (பிணை) போன்ற நோக்கு எனவும்,
மஞ்ஞை போன்ற சாயல் எனவும்

வரிசையாக வந்து பொருள் நிரல் நிறையாயிற்று.

**4.சுண்ணம்:**

''களிறும் கந்தும் போல நளிகடற்
கூம்பும் கலனும் தோன்றும்.''

இதில் முதலடியில் வந்த களிறு இரண்டாம் அடியில் வந்த கூம்பு என்பதோடு சார்ந்து பொருந்திக் களிறு போன்ற கலன் என வரும்.

அது போலவே கந்துபோன்ற கூம்பு எனப் பொருத்துதல் வேண்டும்.

**அரும்பதவுரை:**

அடுக்கிய தோற்றம்-உவமை பல தோன்றுதல். விடுத்தல்-கடிதல். நீக்குதல். சுண்ணம்-உவமையைப் பொருந்தச் சார்த்துதல். பொருத்துதல். 38

**உவமையியல் நிறைவுற்றது**